TNVR070003652025

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்
முன்னிலை: செல்வி. அ. இலக்கியா பி.பி.ஏ., எல்எல்.பி.,
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.48/2025**

**CNR.No.TNVR070003652025**

CRP Rule 106

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஏழாயிரம்பண்ணை காவல் நிலையம்,<br>குற்ற எண்.107/2024 |
| குற்றம்சாட்டப்பட்டவர் | அசோக்குமார், வயது 42,<br>த/பெ. காளியப்பன்,<br>4/59, கிழக்குத்தெரு, புல்லக்கவுண்டன்பட்டி. |
| குற்ற நிகழ்வு நாள் | 23.08.2024 |
| புகார் நாள் | --- |
| எதிரி கைது நாள் | 23.08.2024 |
| பிணையில் சென்ற நாள் | 29.08.2024 |
| Commitment | இல்லை |
| விசாரணை தொடங்கிய நாள் | 21.05.2026 |
| விசாரணை முடிந்த நாள் | 26.05.2026 |
| தண்டனை அல்லது தீர்ப்பு நாள் | 11.06.2026 |
| தீர்ப்பு நகல் எதிரிக்கு கொடுத்த நாள் | இல்லை |
| காலதாமதத்திற்கான காரணம் | சாட்சி விசாரணைக்காக தாமதம் |

| | |
|---|---|
| அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு. வசந்த்<br>அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை. |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | S. மாரிமுத்து, பி.ஏ., பி.எல்., |

இருதரப்பு வாதுரைகள் கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## தீர்ப்புரை

**1. குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய குற்ற எண்.107/2024-ன் கீழ் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:**

கடந்த 23.08.2024 ம் தேதி காலை 11.30 மணிக்கு குற்றம்சாட்டப்பட்ட நபருக்குச் சொந்தமான பழைய மாட்டுப் பண்ணையில் வைத்து குற்றம்சாட்டப்பட்ட நபர் வெடித்தால் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்தும் திரி வைக்கப்பட்ட மருந்தடைக்கப்படாத பேன்சி ரக வெடிகளுக்கு பயன்படுத்தப்படும் இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை – 01 எண்ணமும், மெஷின் திரிகள் – 3 கட்டு, திரி அறுக்கும் கத்தி ஒன்று, வெடி உப்பு சுமார் 5 கிலோ ஆகியவற்றை பயன்படுத்தி பேன்சி ரக வெடிகளை தயாரிப்பதற்காக வெடிகளுக்கு திரி வைத்து தயார் செய்த குற்றத்திற்காக குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது பிரிவு 9(B)(1)(a) Indian Explosive Act–ன் கீழ் ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230–BNSS–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** மேலும் வழக்கின்படி அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது தாக்கல் செய்த குற்ற அறிக்கை ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது பிரிவு 9(B)(1)(a) Indian Explosive Act–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வனைந்து

குற்றம்சாட்டப்பட்ட நபரிடம் விளக்கி வினவிய போது குற்றம்சாட்டப்பட்ட நபர் குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து இந்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார்கள் .

**4.** அரசு தரப்பிலிருந்து அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்றுப்பொருள்கள் சா.பொ.1 முதல் சா.பொ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.<u>அரசு தரப்பு சுருக்கம் :</u>**

**5.1.** அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரியவரும் சங்கதிகள் என்னவென்றால், அ.சா.1 சிறப்பு சார்பு ஆய்வாளர் அவரது முதல் விசாரணையில், கடந்த 2024ம் ஆண்டு ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 23.08.2024ம் தேதி 11.00 மணிக்கு வெம்பக்கோட்டை வட்ட காவல் நிலைய ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஏழாயிரம்பண்ணை சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் அவர்களுக்கு உதவியாக தானும் முதல்நிலை காவலர் 3861 திரு.மாரிமுத்து என்பவரும் கள்ள வெடி, கள்ள திரி குற்ற தடுப்பு சம்மந்தமாக ஏழாயிரம்பண்ணை சரகம், புல்லக்கவுண்டன்பட்டி, இந்திரா காலனியில் ரோந்து சுற்றி கண்காணித்து வரும் போது இந்திரா காலனி மேற்கு பக்கம் அசோக்குமார் என்பவருக்கு சொந்தமான பழைய மாட்டு பண்ணையில் கள்ள வெடி தயாரித்தது சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 11.30 மணிக்கு மேற்படி போலீஸ் பார்ட்டி சகிதம் அந்த இடத்திற்கு சென்று பார்க்க அங்கு பேன்சி வெடி தயாரித்து குழாயில் திரி வைத்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை பிடித்து விசாரிக்க எதிரி அசோக்குமார் கள்ள வெடி தயாரிப்பதை ஒப்புக் கொண்டதால் அரசு அனுமதியில்லாமல் பேன்சி ரக கள்ள வெடி தயாரித்தால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தெரிந்திருந்தும், தயாரித்த குற்றத்திற்காக மேற்படி நபரை சார்பு ஆய்வாளர் கைது செய்து மருந்து

அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை ஒன்று, கம்பியூட்டர் திரி மூன்று கட்டும், திரி வெட்ட பயன்படும் கத்தி ஒன்று, 5 கிலோ வெடி உப்புகள் ஆகியவற்றை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் வெளி நபர்கள் யாரும் கையொப்பமிட முன்வாராதால் போலீஸ் பார்ட்டியாகிய தானும், முதல்நிலை காவலர் திரு. மாரிமுத்து என்பவரும் கையொப்பம் இட்டோம் என்றும், தன்னிடம் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் என்றும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 என்றும், வழக்கு சொத்துக்கள் அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.2 என்றும், எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.2. அ.சா.2 சிறப்பு சார்பு ஆய்வாளர் அவரது முதல் விசாரணையில், கடந்த 23.08.2024ம் தேதி 11.00 மணிக்கு வெம்பக்கோட்டை வட்ட காவல் நிலைய ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஏழாயிரம்பண்ணை சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் அவர்களுக்கு உதவியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ், முதல்நிலை காவலர் 3861 திரு.மாரிமுத்து என்பவரும் கள்ள வெடி, கள்ள திரி குற்ற தடுப்பு சம்மந்தமாக ஏழாயிரம்பண்ணை சரகம், புல்லக்கவுண்டன்பட்டி, இந்திரா காலனியில் ரோந்து சுற்றி கண்காணித்து வரும் போது இந்திரா காலனி மேற்கு பக்கம் அசோக்குமார் என்பவருக்கு சொந்தமான பழைய மாட்டு பண்ணையில் கள்ள வெடி தயாரித்தது சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 11.30 மணிக்கு மேற்படி போலீஸ் பார்ட்டி சகிதம் அந்த இடத்திற்கு சென்று பார்க்க அங்கு பேன்சி ரக வெடி தயாரித்து குழாயில் திரி வைத்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை பிடித்து விசாரிக்க எதிரி அசோக்குமார், என்பவர் கள்ள வெடி தயாரிப்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், அரசு அனுமதியில்லாமல் பேன்சி ரக கள்ள வெடி தயாரித்தால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தெரிந்திருந்தும், தயாரித்த குற்றத்திற்காக மேற்படி நபரை சார்பு ஆய்வாளர் கைது செய்து மருந்து

அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை ஒன்று, கம்பியூட்டர் திரி மூன்று கட்டும், திரி வெட்ட பயன்படும் கத்தி ஒன்று, 5 கிலோ வெடி உப்புகள் ஆகியவற்றை அத்தாட்சியில் பேரில் கைப்பற்றியுள்ளார் என்றும், அந்த அத்தாட்சியில் வெளி நபர்கள் யாரும் கையொப்பமிட முன்வாராதால் போலீஸ் பார்ட்டியாகிய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ், முதல்நிலை காவலர் திரு. மாரிமுத்து என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.107/2024, பிரிவு – 9(B)(1)(a) IE Act –ன் கீழ் அ.சா.ஆ.3–ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்பு கைது செய்த எதிரி அசோக்குமார் என்பவரை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் 23.08.2024 ம் தேதி 14.15 மணிக்கு சாட்சிகள் தர்மர், பாண்டி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4–ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5–ஆன மாதிரி வரைபடம் தயார் செய்துளதாகவும், பின்னர் இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வட்ட காவல் ஆய்வாளர் திரு.சங்கர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.6–ஆன படிவம் 91 மூலமாக நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், மருந்து அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை –1, கம்ப்யூட்டர் திரி –3 கட்டு, திரி வெட்ட பயன்படும் கத்தி –1, 5 கிலோ வெடி உப்புகள் சா.பொ.1 முதல் சா.பொ.4 என்றும், இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு – 9(B)(1)(a) IE Act ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

6) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு

பாதகமான அம்சங்கள் குறித்து குற்றம்சாட்டப்பட்ட நபரிடம் பிரிவு 351(1)(ஆ)–BNSS–ன் கீழ் விளக்கி வினவியபோது, குற்றம்சாட்டப்பட்ட நபர் தங்கள் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். குற்றம்சாட்டப்பட்ட நபர் தரப்பில் குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றம்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொள்வதால் விடுதலை செய்யப்பட மாட்டாது என்று விளக்கிக் கூறப்பட்ட பிறகும் குற்றம்சாட்டப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

**7.** மேலும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது குற்றம்சாட்டப்பட்ட நபர் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்தற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து, குற்றம்சாட்டப்பட்ட நபர் மீதான பிரிவு 9(B) (1)(a) of IE Act ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவியபோது குற்றம்சாட்டப்பட்ட நபர் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

8. குற்றம்சாட்டப்பட்ட நபரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டன. குற்றம்சாட்டப்பட்ட நபர் வழக்கை ஒத்துக்கொண்டு முடிப்பதாக தெரிவித்த காரணத்தினாலும், அவருக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எவ்வித பலன்களும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

9. முடிவாக குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவு 9(B) (1)(a) of IE Act–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவு 9(B) (1)(a) of IE Act–ன் கீழான குற்றத்திற்கு ரூ.5000/– அபராதமும் விதித்து பிரிவு 271(2)–BNSS–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி அபராத தொகையை கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து உத்தரவிடப் படுகிறது.

**<u>10. வழக்கு சொத்துக்கள்–</u>**

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.40/2025–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களான சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையான திரி வைக்கப்பட்ட மருந்து அடைக்கப்படாத பேன்சி ரக வெடிகளுக்கு பயன்படுத்தப்படும் இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்குப்பை –1, மெஷின்திரிகள் –03 கட்டு, திரி அறுக்கும் கத்தி –01, வெடி உப்பு சுமார் – 05 கிலோ ஆகியவற்றை மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு சட்டத்திற்குரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**11. <u>பிணைபத்திரம்:</u>**

நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராக குற்றம்சாட்டப்பட்ட நபர் எழுதிகொடுத்த பிணைபத்திரம் ஏதேனும் இருந்தால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**12.** இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு அல்லது மனு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு அல்லது அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்ட நபர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு பிரிவு 481(A) BNSS–ன் கீழ் எழுதி கொடுத்த பிணைப்பத்திரம் இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குப் பின்னர் தாமாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் வருடம் ஜுன் மாதம் 11–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
நீதித்துறை நடுவர் எண்.1,
சாத்தூர்.

**1. <u>அரசுதரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – திரு. காளிராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)
அ.சா.2 – திரு. ஜோதிராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

**2. <u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.சா.ஆ.1 – அத்தாட்சி

அ.சா.ஆ.2 – வழக்கு சொத்து அடங்கிய புகைப்படம்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 – படிவம் 91

3. <u>அரசுதரப்பு சான்று பொருள்:</u> –

சா.பொ.1 – திரி வைக்கப்பட்ட மருந்து அடைக்கப்படாத பேன்சி ரக வெடிகளுக்கு பயன்படுத்தப்படும் இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்குப்பை –1

சா.பொ.2– மெஷின்திரிகள் –03 கட்டு

சா.பொ.3– திரி அறுக்கும் கத்தி –01

சா.பொ.4– வெடி உப்பு சுமார் – 05 கிலோ

<u>4. அரசு தரப்பில் விசாரிக்கப்படாத சாட்சி–</u>

1. திரு. மாரிமுத்து (முதல்நிலை காவலர்)
2. திரு. தர்மர்
3. திரு. பாண்டி
4. திரு. ஹரிராம் (சார்பு ஆய்வாளர்)
5. திரு. சங்கர் (காவல் ஆய்வாளர்)

5. <u>குற்றம்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சிகள்:</u> – இல்லை

6. <u>குற்றம்சாட்டப்பட்ட நபர் தரப்பு சான்றாவணங்கள்:</u> – இல்லை

7. <u>குற்றம்சாட்டப்பட்ட நபர் தரப்பு சான்று பொருட்கள்:</u> – இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

நீதித்துறை நடுவர் எண்.1,

சாத்தூர்.

<u>பிற்சேர்க்கை</u>

1. விசாரணை காலத்தில் குற்றம்சாட்டப்பட்ட நபர் பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 விசாரணை தேதிகளுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரி அபராதம் செலுத்திவிட்டார்.

C.C.48/2025

Judgment

Dt.11.06.2026.